FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348083

1. District : Krishnagiri PS: VAO AC Year: 2026 FIR No.: 06/AC/2026 Date: 09.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988, as amended Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 09.07.2026 Date to : before 05.15 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 09.07.2026 Time : 17.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 50 KM West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Transport Department Checkpost,
முறைக் காவல் எண் முகவரி Bagalur @ Nallur, Hosur, Krishnagiri District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Sakthivel (b) Father's/ Husband's Name : S.V. Govindasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age-51 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : PA TO SDRO (g) Address : O/o. the Special District Revenue Officer (L.A), State Highways, Krishnagiri.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. C.S. Praburam Diwagaran, Age-51, S/o Chandirasekaran, Motor Vehicle Inspector (N.T), Transport Department Checkpost, Bagalur @ Nallur, Hosur, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted!

Separate Sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி தகவல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

09/07/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

09.07.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

09.07.2026 at 18.05 hrs

Name: பெயர் A.T. Jai Kumar,
Rank: நிலை ..... No. எண் .....
Deputy Superintendent of Police,
V&AC, Krishnagiri.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 6/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 09.07.2026-ம் தேதி 17.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலை, தனி மாவட்ட வருவாய் அலுவலரின் (நி.எ), நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். மேலும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள் 07.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், நல்லூரில் இயங்கிவரும் பாகலூர், போக்குவரத்துத்துறை பல்நோக்கு சோதனைச்சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும், மாநிலங்களுக்கிடையே செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும், விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதற்கு இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும், எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் காலை 05.15 மணிக்கு பாகலூர், போக்குவரத்துத்துறை பல்நோக்கு சோதனைச்சாவடியில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன். சோதனைச்சாவடிக்கு சென்றபோது, வாகனங்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர்களிடம் விசாரிக்க, 1) திரு.C.நாகராஜ், த/பெ N.சின்ராஜ், க.எண் 3/1698-B, நியு காலனி, தருமபுரி மற்றும் 2) திரு.K.வடிவேல், த/பெ குப்பன், க.எண்.3/57, C.மோட்டுப்பட்டி கிராமம், புளுதிகரை அஞ்சல், தருமபுரி வட்டம் (ம) மாவட்டம் என்று தெரிவித்தனர்.

அவர்களை அழைத்துக்கொண்டு, மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு வருகிறேன். சோதனைச்சாவடியில் பணியில் செலுத்தும் இடத்தில் நின்றுகொண்டிருந்த வாகன ஓட்டுநர்கள் 1) திரு.M.பாலன், த/பெ பாலசிக்கம், க.எண் 3/98, கொங்கு தெரு, மொளசி அருகில், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம், 2) திரு.S.சபி, த/பெ ஜெயிப், சல்மா கலையரங்கம் வீடு, வேலுர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம், 3) திரு.T.வெங்கடாசலம், த/பெ திருப்பதி, க.எண்.1/147, கம்மாளம்பட்டி கிராமம், எல்லப்புடையாம்பட்டி அருகில், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் மற்றும் 4) திரு.G.கோபிநாத், த/பெ கோவிந்தராஜ், க.எண்.737, குட்டப்பட்டி மேல் கொட்டாய் கிராமம், பன்னி அள்ளி அருகில், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவர்களை சோதனைச்சாவடிக்குள் அழைத்துவந்து, சோதனைச்சாவடிக்குள் இருந்து வெளியே யாரும் செல்லாதவாரும், வெளியில் இருந்து உள்ளே யாரும் வராதவாறும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. நானும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் சோதனைச்சாவடியில் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.S.பிரபுராம் திவாகரன் அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, திடீர் ஆய்வு செய்ய வந்திருக்கும் விபரத்தை தெரிவித்தேன். மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரிக்க, 08.07.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 09.07.2026-ம் தேதி காலை 08.00 மணி வரையுள்ள இரவு பணியில் இருப்பதாக தெரிவித்தார். மேலும், சோதனைச்சாவடியில் திரு.R.சிவராஜ் என்பவர் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் திங்கள் முதல் வெள்ளி வரை அலுவலக நேரமான காலை 10.00 மணி முதல் பகல் 06.00 மணி வரை அலுவல் பணியினை மேற்கொள்வார் என்றும், அலுவலக உதவியாளர் பணி 14.12.2015-ம் தேதி முதல் காலியாக உள்ளது என்றும் தெரிவித்தார். பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.S.பிரபுராம் திவாகரன் அவர்களிடம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்டதற்கு, இரவு 08.00 மணி முதல் காலை 05.30 மணி வரை பல்வேறு இனங்களில் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்த வசூல் அட்டவணையை கணினியிலிருந்து அச்சுப் பிரதி எடுத்து ஆஜர் செய்து, 08.07.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 09.07.2026-ம் தேதி காலை 05.30 மணி வரையில் அரசு கணக்கில் பசுமை வரி ரூ.2,250/-, சேவைக் கட்டணம் ரூ.30/- மற்றும் 1% வரி ரூ.23/- என மொத்தம் ரூ.2,303/- வசூலானதாக தெரிவித்து, அவர்

இருக்கைக்கு முன்பிருந்த மர டிராயரில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். நான் அதை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.2,303/- சரியாக இருந்தது. பின்னர், நான் அரசு கணக்கில் வேறு ஏதாவது பணம் உள்ளதா என்று மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டதற்கு, 08.07.2026-ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை பகல் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.K.சந்தோஷ் குமார் என்பவர் ரூ.42,308/- வசூல் செய்துள்ளதாக தெரிவித்து, பண பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில், வரி ரூ.27,270/- கட்டணம் ரூ.900/-, இணக்க கட்டணம் ரூ.13,000/-, சேவைக் கட்டணம் ரூ.860/- மற்றும் 1% வரி ரூ.278/- என மொத்தம் ரூ.42,308/- வசூலான விவரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. பின்னர், மோட்டர் வாகன ஆய்வாளர் தனது இருக்கைக்கு முன்பிருந்த மர டிராயரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்கையில், அதில் பணம் ரூ.42,308/- சரியாக இருந்தது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் சோதனை மேற்கொண்டபோது, அவரது இருக்கைக்கு முன் டேபிளின் மீதி இருந்த அட்டை பெட்டியினுள் இருந்த ரூ.27,000/- (200 X 56 + 100 X 157 + 50 X 2); மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறைக்கு மேற்குபக்கம், கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த பதிவேடுகள் அறையில் தெற்கு சுவரை ஒட்டியிருந்த 5 அடுக்குகள் கொண்ட இரும்பு ரேக்கின், மூன்றாவது ரேக்கில் பதிவேடுகளுக்கு இடையில் இருந்த இரண்டு காக்கிநிற அலுவலக கவர்களில் இருந்த, ரூ.1,50,000/- (500X100 ஒரு கவரிலும் + 500X200 மற்றொரு கவரிலும்) என மொத்தம் ரூ.1,77,000/- கணக்கில் வராத பணம் இருந்தது. மேற்படி கணக்கில் வராத பணம், ரூ.1,77,000/-, வாகனங்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்ததற்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் மோட்டார் வாகன ஆய்வாளர் கையூட்டாக பெற்ற பணம் என்பதால், திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையில் மேற்படி பணம் ரூ.1,77,000/- கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,77,000/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.C.S.பிரபுராம் திவாகரன், திரு.C.நாகராஜ், திரு.K.வடிவேல் மற்றும் வாகன ஓட்டுநர்கள் திரு.M.மணி, திரு.S.ஷபி, திரு.T.வெங்கடாசலம் மற்றும் திரு.G.கோபிநாத் ஆகியோரின் வாக்குமூலங்கள் திடீர்

ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் **ஆஜர்படுத்துகிறேன்.** பாகலூர் போக்குவரத்துத்துறை பல்நோக்கு சோதனைச்சாவடியில் **மோட்டார் வாகன** ஆய்வாளராக பணிபுரியும் திரு.C.S.பிரபுராம் திவாகரன் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.G.சக்திவேல்.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, மேற்கு சரக, காவல் கண்காணிப்பாளர், அவர்களின் உத்தரவுபடி, மேற்கண்ட புகாரின்பேரில், கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 6/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018-ன்படி இன்று 09.07.2026-ம் தேதி 18.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்பமைமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கும். இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

09.07.26